# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.38 நாள் 09.07.2026

| | | | |
|---|---|---|---|
| CC. No. | 233/2025 | | |
| பெயர் | சீனிவாசன் | த/பெ. | கோதண்டராமன் |
| வயது | 63 | தொழில் | ஓய்வு |
| கிராமம் | சாலியமங்கலம் | தாலுக்கா | பாபநாசம் |

**(எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, சாலியமங்களத்தில் வசித்து வருகிறேன். நான் Rural Helath care provider (TB) பணிபுரிந்து வந்தேன். எதிரிகளை தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு National Board of Alternative Medicine என்ற பெயரில் Alternative Medicine படிப்பதற்காக விளம்பரம் ஒன்று செய்தித்தாளில் பார்த்தேன். நான் தொலைபேசி மூலமாக அந்த அலுவலகத்திற்கு கேட்டபோது அதிலுள்ள பயிற்சி வகுப்புகளை படிப்பது குறித்து தெரிந்துக்கொண்டேன். பின்பு, அந்த வகுப்பில் நான் சேர்ந்தேன். அது பகுதி நேர படிப்பாகும். சுமார் 10 வார காலத்திற்கு சனி, ஞாயிறில் வகுப்பு நடந்தது. நான் அந்த பயிற்சியை முடித்தால் மாற்றுமுறை மருத்துவத்தில் பயிற்சி செய்யலாம் என்று சொன்னார்கள் நான் பயிற்சி செய்யவில்லை. பின்பு இது சம்மந்தமாக சான்றிதழ் வழங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் சான்றிதழ் தான் National Board of Alternative Medicine – நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகும். அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.56** ஆகும். இந்த படிப்பு சம்மந்தமாக எனக்கு கொடுத்த தற்காலிக சான்றிதழ் **அ.சா.ஆ.57** ஆகும். என்னுடைய பட்டமளிப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.58** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

பயிற்சி வகுப்பு குத்தாலத்தில் உள்ள National Board of Alternative Medicine –ல் நடந்தது அது குறிப்பிட்டு எந்த இடத்தில் உள்ளது என்று

CJM, MAYILADUTHURAI.

(SRINIVASAN)

தற்போது ஞாபகம் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.39 நாள் 09.07.2026

| CC. No. | 233/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | கணேசன் | த/பெ. | ரெத்தினம் |
| வயது | 72 வய | தொழில் | விவசாயம் |
| கிராமம் | நெய்வாசல் | தாலுக்கா | ஒரத்தநாடு |

**(எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, நெய்வாசலில் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரிகளை தெரியும். நான் இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். 2012ஆம் ஆண்டு செய்தித்தாளில் அரசு பதிவு பெற்ற மருத்துவ சங்கம் என்ற பெயரில் செல்வராஜ் என்பவர் விளம்பரம் கொடுத்திருந்தார். நான் அதனை பார்த்துவிட்டு செல்ராஜிடம் பேசினேன். என்னை அவர் நேரில் வரச்சொன்னார். நான் நேரில் சென்றேன். நான் அவர் நடத்திய பயிற்சி வகுப்பில் சேர்வதற்காக ரூ.10,000/– செலுத்தினேன். இரசீது எதுவும் தரவில்லை. சுமார் 10 வார சனி, ஞாயிறுகளில் பயிற்சி வகுப்பில் கலந்துக்கொண்டேன். அந்த படிப்பு சம்மந்தமாக எனக்கு சான்றிதழ் வழங்கினார்கள். Community Medical Service in Diploma சான்றிதழ் வழங்கப்பட்டது. அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.59** ஆகும். அதற்கான மதிப்பெண் சான்றிதழ் **அ.சா.ஆ.60** மற்றும் அதற்கான தற்காலிக சான்றிதழ் **அ.சா.ஆ.61** ஆகும். பயிற்சி செய்வதற்கான Practical Training Certificate **அ.சா.ஆ.62** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்

CJM, MAYILADUTHURAI.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.